# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar **Case No. CC. 133/2025**

Miscellaneous

Preliminary Register

Deposition of **PW- 4 Additional Witness** /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகன் | Father Name | : | ராஜேந்திரன் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | காவல் உதவி ஆய்வாளர், வலங்கைமான் காவல் நிலையம் |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of March 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளுக்கு எதிராகவும் சாட்சியம் அளித்துள்ளதாலும் இவ்வழக்கின் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான திரு. கோவிந்தராஜன் மற்றும் திருமதி.மஞ்சுளா ஆகியோர்களுடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 01.07.2018ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு வலங்கைமான் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது வலங்கைமான் தாலுக்கா சோத்தமங்கலம் குடியான தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் மனைவி செல்வராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 188/2018 ச/பி.294(b), 448, 506(1) இதச மற்றும் சட்டப்பிரிவு 4, தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனு **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணபதி மற்றும் மணிமேகலை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் அவை முறையே **அ.த.சா.ஆ.5** மற்றும் **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கீர்த்தி, ராஜேந்திரன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் கணபதி மற்றும் மணிமேகலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக தலைமறைவு குற்றவாளிகளாக கருதி ச/பி. 294(b), 448, 506(i) இதச மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவருடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை வழக்கு எதுவும் பதியப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையாண ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல்

எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.25 18:10:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.